(6 pages) **Reg. No. : .................................**

**Code No. : 30496** **Sub. Code : CITL 41**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2023.

Fourth Semester

Part I — Tamil

பொதுத் தமிழ் — தாள் — IV

(For those who joined in July 2021 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.

1. 'பாலும் உண்ணாள் பந்துடன் மேவாள்' — யார் கூற்று?

   (அ) நற்றாய் (ஆ) தோழி

   (இ) செவிலி (ஈ) தலைவன்

2. கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉங் குறை கொடாது என்று சிறப்பிக்கப்படுபவர்

   (அ) அந்தணர் (ஆ) அரசர்

   (இ) வணிகர் (ஈ) வேளாளர்

3. அணிலின் இளமைப்பெயர்

   (அ) குஞ்சு (ஆ) பிள்ளை

   (இ) குட்டி (ஈ) குருளை

4. மாகாணம் என்கிற உருதுச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்

   (அ) மாவட்டம் (ஆ) அரண்மனை

   (இ) வட்டாரம் (ஈ) மாநிலம்

5. விரைந்து செல்லும் கப்பலுக்குத் தமிழர் இட்ட பெயர்

   (அ) கலம் (ஆ) நாவாய்

   (இ) மதலை (ஈ) வங்கம்

6. செல்வம் உள்ளபோதே அதைத் துறக்க வேண்டும் என்று கூறியவர்

   (அ) திருவள்ளுவர்

   (ஆ) கபிலர்

   (இ) அவ்வையார்

   (ஈ) பெருஞ்சித்திரனார்

7. ஆதி அத்தி நாடகத்தின் ஆசிரியர்

   (அ) தொ. பரமசிவன் (ஆ) பெ. தூரன்

   (இ) பொ. சீனிவாசன் (ஈ) மு. வரதராசன்



Nesamony Memorial Christian College, Marthandam

8. ஆட்டன் என்ற பட்டம் அத்திக்கு யாரால் வழங்கப்பட்டது?

(அ) ஆதி

(ஆ) கரிகாற்பெருவளத்தான்

(இ) அமைச்சர்

(ஈ) சேனாதிபதி

9. குறிஞ்சித்திணைப் பாடல்கள் பாடுவதில் வல்லவர்

(அ) கபிலர் (ஆ) பரணர்

(இ) நக்கீரர் (ஈ) நல்லந்துவனார்

10. பத்துப்பாட்டு நூல்களுள் மிகப்பெரியது

(அ) பட்டினப்பாலை (ஆ) முல்லைப்பாட்டு

(இ) மதுரைக்காஞ்சி (ஈ) குறிஞ்சிப்பாட்டு

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளி. வினா (அ) அல்லது (ஆ) தேர்வு செய்க.

11. (அ) குறுங்குடி மருதனார் பாடல் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) காவிரிப்பூம்பட்டின நகரச் சிறப்பினை எழுதுக.



12. (அ) பின்வரும் வடமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.

ஆராதனை, உற்சாகம், கீர்த்தி, சபதம், திகில்.

(அல்லது)

(ஆ) புறத்திணைகளுள் ஏதேனும் இரண்டனை விளக்குக.

13. (அ) பெண்ணுக்கும் வளமைக்குமான தொடர்பை வானமாமலை கட்டுரைவழி விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆசிரியர் இராமநாதன் திருக்குறள் சிறப்பினை விளக்கும் பாங்கினைப் புலப்படுத்துக.

14. (அ) பெண்ணணங்கே போய் வருவாய் என்று பாடுவதற்கான காரணங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) ஆதி அத்தி நாடகத்தில் நுமக்குப் பிடித்த கதாபாத்திரம் பற்றி எழுதுக.

15. (அ) 'புறநானூறு தமிழரின் வரலாற்றுக் களஞ்சியம்' — அரண் செய்க.

(அல்லது)

(ஆ) பத்துப்பாட்டில் அகத்திணை நூல்கள் பற்றியெழுதுக.



Nesamony Memorial Christian College, Marthandam

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளி. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள குறுந்தொகைப் பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்துக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழரின் வணிகச் சிறப்பினைப் பட்டினப்பாலை வழி விவரிக்க.

17. (அ) ஐந்திணைகளுக்குரிய பொழுது குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) பின்வரும் ஓரெழுத்து மொழிகளுக்குப் பொருள் தருக.

ஐ, கா, தா, தை, ந்ா, பா, மா, வீ

18. (அ) குலசேகராழ்வாரின் பக்தித் திறத்தினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) சங்க காலப் பெண்கள் நிலை குறித்துக் கட்டுரைக்க.



19. (அ) ஆதியின் பாத்திரப் படைப்பினை விளக்கிக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஆதி அத்தி நாடகத்தில் காவிரி ஆறும் ஒரு கதை மாந்தரா? விளக்கம் தருக.

20. (அ) சங்கப்பாடல்கள் பிற்கால இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டமையை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பழந்தமிழர் வாழ்வியலில் இயற்கை பெறுமிடம் குறித்துக் கட்டுரைக்க.

---



*Nesamony Memorial Christian College, Marthandam*